Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
| --- | --- |

வேணு : 18 | மார்ச் 2013 | கானம் : 8




சென்னை மீனம்பாக்கம் A.M.Jain College இல் 23.2.2013

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

ஸ்ரீ ஹரி:


தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 18 | மார்ச் 2013 | கானம் : 8

Delivered by India Post www.indiapost.gov.in



மதுரை வி.எஸ்.செல்லம் மாளிகை
30.1.2013 - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



பிப்ரவரி 14, 2013 - மதுரபுரி ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச
பெருமாள் பிரதிஷ்டா தினம் - திருக்கல்யாண உற்சவம்



சிவகாசி - இண்டஸ்டிரிஸ் சாரிடீஸ் கல்யாண மண்டபம்
29.1.2013 - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



பிப்ரவரி 4, 2013 - சென்னை நாரத கான சபா
ஸ்டார் விஜய் டி.வி. சேனலின் பக்தி விழா துவக்கம்



தூத்துக்குடி சுப்பையா வித்யாலயம்
28.1.2013 – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை














1. மதுரபுரி - கன்யாகுமரி
ஜய ஹனுமான் சன்னதி
பள்ளி சிறார்களுக்கு சீருடை
வழங்கல் 30.1.2013
2. பிப்ரவரி 2-11, மும்பை-
நிறுவனங்களில் பணி
புரிவோருக்கான பயிற்சி
வகுப்பு - ராமானுஜம்ஜி
3. பிப்ரவரி 13-19, ஆம்பூர்
ஸ்ரீனிவாச பெருமாள்
ஆலயத்தில் முரளிஜி
ஸ்ரீமத்பாகவத உபன்யாசம்





21.2.2013 - ஏகாதசி - மதுரபுரி ஆஸ்ரமம் - ஸ்ரீஞானானந்த விஜயம் - சி.டி. வெளியீடு - முதற்பிரதியை ஸ்ரீமுகில் மாமா பெற்று கொள்கிறார். அருகில் ஸ்ரீவிஜி, ஸ்ரீபாலாஜி பாகவதர்கள்

17.2.2013 - நாமக்கல் அருகே மோகனூர் பெருமாள் கோவிலில் பிரவசனம்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 மார்ச் 2013 கானம்: 8

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

## இந்த இதழில் ...


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 204 | 3 | ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 18 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ஆலய தரிசனம் | 30 |
| | | பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| பகவானின் நாமம் | 08 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| பாகவத பழம் - 36 | 10 | | |
| மரணத்திற்கு பின் | 12 | மாலே மணிவண்ணா | 40 |
| நாமம் சொல்ல தடை எது? | 16 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


**பலதம் ஸ்யாத்புராணம் து ஸ்ரீமத்பாகவதம் சுபம் ।**
**தர்மகாமார்த்த மோக்ஷாணாம் சாதனம் ஸ்யாந் ந ஸம்சய: ॥**

ஸ்ரீமத்பாகவத மஹாத்மியம் 6:68

மங்களமான ஸ்ரீமத்பாகவதம் என்கிற புராணமானது, சகல பலன்களையும், எல்லோருக்கும் சுலபத்தில் அளிக்க வல்லது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களுக்கும், இது மிக எளிதான சாதனமாகும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

நியாயத்திற்கு விரோதமாக, தர்க்கத்திற்கு பொருந்தாதவர்களாக, தன்னலம் மிகுந்தவர்களாக மக்கள் இருக்கிறார்கள். **இருந்தாலும் அவர்களிடம் அன்பாக இருங்கள்**!

நீங்கள் மக்களுக்கு நன்மை செய்தாலும், அவர்கள் அதற்கு ஒரு சுயநல நோக்கத்தை கற்பித்து உங்களை குறை கூறுவார்கள். **இருந்தாலும் நல்லதையே செய்யுங்கள்**!

உங்கள் முயற்சிகளில் நீங்கள் வெற்றி பெற்றால், விரோதிகள் தோன்றுவது இயற்கை. **இருந்தாலும் வெற்றிப்பாதையில் செல்லுங்கள்**!

நீங்கள் இன்று செய்யும் நன்மை, நாளைக்கே மறக்கப்பட்டு விடும். **இருந்தாலும் நல்லதையே செய்யுங்கள்**!

உண்மையும், வெள்ளை உள்ளமும் உங்களை அபாய நிலைக்கு செலுத்தி விடும். **இருந்தாலும் உண்மையும் வெள்ளை உள்ளமும் உடையவர்களாக இருங்கள்**!

மக்கள் உண்மையாகவே உதவியை எதிர்பார்த்து நிற்கிறார்கள். ஆனால் உதவி செய்தால், உங்களையே தாக்கக்கூடும். **இருந்தாலும் உதவியையே செய்யுங்கள்**!

உங்களிடமுள்ள மிக சிறந்தவற்றை உலகுக்கு அளியுங்கள். ஆனால், இவ்வுலகம் உங்களை காலால் மிதித்து தள்ளி விடும். **இருந்தாலும் உலகுக்கு உங்களிடம் உள்ள சிறந்தவற்றையே வழங்குங்கள்**!

# மதுரமான மஹநீயர் - 204

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

கலியுகத்தில் இறைவனை அடைய நாமம் ஒன்றே வழி என்று அநேக மஹான்கள், உபதேசித்து வந்துள்ளனர். அதுபோலவே நமது சத்குருநாதரும், நாமத்தின் பெருமையையும் மஹிமையையும் ஓயாது மக்களுக்கு எடுத்து சொல்லி வருகிறார்கள். மகாமந்திரத்தின் பயனை உலகில் உள்ள எல்லோரும் அனுபவிக்க வேண்டும் என்ற அவரது அபிலாஷையானது, குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி டிரஸ்டின் செயல்பாடுகளால், பூர்த்தியாவதை தற்பொழுது நாடு, நகரமெங்கும் நாம் பார்த்து வருகிறோம். மஹாமந்திரம் சொல்லி எண்ணற்றவர்களுக்கு பலன்கள் கிடைத்து வருகின்றது.

பத்தொன்பது நாமத்வார்களிலும் மற்றும் கோவில்கள், பொது இடங்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட காட் சத்சங்க மையங்களிலும், அன்பர்கள் பலர், மகாமந்திர கீர்த்தனத்தை சொல்லி வருகின்றனர். அன்பர்கள் எல்லோரும் கூட்டாக சேர்ந்து பஜனை, கதை, கீர்த்தனம் என்று அழகாக சத்சங்கத்தில் கலந்து கொள்கின்றனர்.

சமீபத்தில் கூட ஆயிரக்கணக்கானோர் தமிழகம் முழுவதும் மற்றும் பிற மாநிலங்களிலும் கூட, பிப்ரவரி 13லிருந்து 19வரை குருநாதரின் ஆக்ஞைப்படி மழை வேண்டி நாமகீர்த்தனம் செய்தனர். அதனால் சந்தோஷப்பட்ட பகவான், மழைக்காலமில்லாத பிப்ரவரியில் கூட, மழை பொழிந்து, நம் மனதை எல்லாம் குளிர்வித்து இருக்கிறான்.

சமீபத்தில், ஒரு சத்சங்க நிகழ்ச்சி ஒன்றில், மேடையில் அழகாக கிருஷ்ணரையும், ராமரையும் மற்றும் அவர்களுக்கு இணையாக சாதுக்களான மஹான்களையும் வைத்து அலங்கரித்து இருந்தனர். அந்த நிகழ்ச்சிக்கு ஒரு அன்பர் வந்திருந்தார். அவர் நாமகீர்த்தனத்தில் ஆர்வமுடன் நன்கு ஈடுபட்டு கலந்து கொண்டார்.

அவர் நிகழ்ச்சியை நடத்தியவரிடம் ஒரு சந்தேகத்தை எழுப்பினார். அவர் என்ன கேட்டார் என்றால் "நீங்கள் பகவானான கிருஷ்ணனை வைத்து இருப்பது சரிதான். கூடவே அவருக்கு சமமாக சாதுக்களான மஹாத்மாக்களை வைத்து இருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்

அதற்கு சத்சங்கத்தை நடத்தியவர், "இது என்ன பெரிய விஷயம்? ஏகநாதர் எனும் மஹாத்மா, "குரு மாதா, குரு பிதா, குரு எனது குலதெய்வம்" என்றல்லவா பாடி இருக்கிறார். இறைவனின் உருவமாகவே குரு இருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். மஹான்கள் இறைவனுடன் ஒன்றியவர்களாயிற்றே? கடவுள் தனது கருணையால், சாதுக்களான மஹாத்மாக்களின் உருவம் தாங்கி வருகிறார் என்பது எங்கள் பக்தி பூர்வமான நம்பிக்கை. அதனால், இப்படி கடவுளுக்கு சமமாக வைத்து வழிபாடு செய்கிறோம்" என்று பதில் அளித்தார்.

அவ்வன்பர் ஒருமுறை ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த பொழுது என்னிடம் இந்நிகழ்ச்சியை பற்றி தெரிவித்தார். மேலும் இதை விட வேறு ஏதாவது பதில் தந்திருக்கலாமா?, நீங்களாயிருந்தால் என்ன சொல்லி இருப்பீர்கள்? என்றும் கேட்டார். எனக்கும் அவர் சொல்லி இருந்த பதில் சரியாகத்தான் பட்டது. ஆனால், எந்த ஒரு விஷயமானாலும் அதற்கு ஒரு முழு தெளிவு என்பது குருநாதரின் அருள்மொழிகள் மூலம்தானே கிடைக்கும்!

அதனால் ஆஸ்ரமத்தில் குருநாதரிடம் ஒரு நல்ல சமயம் பார்த்து, இவ்விஷயத்தை சுருக்கமாக தெரிவித்தேன். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஏதோ அந்த கேள்வி ஒன்றும் புதிதல்ல என்பது போலவே ஒரு விளக்கம் தந்து அருளினார். அது நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது மட்டுமல்ல. சிந்திக்க வேண்டியதும் கூட.

ஸ்ரீஸ்வாமிஜி என்னிடம், "நமது குடும்பங்களில் உள்ள வழக்கத்தை பார்த்தால், நாம் இறந்த நமது முன்னோர்களை சுவாமி அறையில் வைத்து வழிபடுவதை வழக்கமாகவே கொண்டுள்ளோம். அது ஏன் என்று தெரியுமா?" என்றார்கள்.

நான் மௌனமாக இருந்தேன். குருநாதர் ஏதோ சொல்ல விரும்புகிறார் என்று மட்டும் புரிந்து கொண்டேன். குருநாதர் நிறுத்தியதால், என் மனதின் ஆவல் அதிகமாகியது.

குருநாதரே தொடர்ந்தார்கள். "நமது முன்னோர்கள், இறந்தவுடன், இறைவனடி சேர்ந்து அவனுடன் கலந்துவிடுகிறார்கள் என்று எண்ணித்தான் அப்படி வழிபடுகிறோம். ஆனால் அவர்கள் மறுபடி பிறக்க வாய்ப்புண்டு.

நாம் உடல் மரிப்பதையே மரணம் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் மரணம் என்பது ஒருவருக்கு "நான்" என்கிற அஹம்காரம் (ஜீவத்வம்) அழியும்பொழுதுதான் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்கள்தான் இறைவனுடன் ஒன்றியவர்கள் ஆவார்கள்.

ஆனால், மஹாத்மாக்கள் விஷயத்திலோ, அவர்கள் இவ்வுலகில் பூத உடல் தாங்கி இருக்கையிலேயே, அந்த 'நான்' எனும் "அஹம்"காரத்தை அழித்து இறைவனுடன் இரண்டற கலந்துவிடுகிறார்கள். இறைவனை நேருக்கு நேர் தரிசித்து விடுகிற மஹாத்மாக்களின் நிலை அப்படிப்பட்டதுதான்.

அந்த அடிப்படையில் பார்க்கையில், ஒரு பக்தன் தனது குருவான ஒரு மஹாத்மா, இறைவனுடன் கலந்துவிட்டார் என்று பக்தி பாவத்தில் வணங்குவது மிக சரிதானே?" என்று குருநாதர் மேற்கொண்டு அருளினார்கள்.

அனைவருக்கும் மிகவும் உபயோகப்படும் இந்த விஷயத்தை எல்லோரின் பயன் பொருட்டு பகிர்ந்து கொள்கிறேன்.

**PREMIKA VIDYA KENDRA**

**3RD ANNIVERSARY CELEBRATIONS**

**BETWEEN MARCH 15 - 17, 2013**

**At Premika Vidya Kendra, Gurgaon, Haryana**



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஒருவருடைய பெயரை சொல்லி, நீங்கள், அவரை மஹாத்மா என்கின்றீர்கள். ஆனால், நான் எவ்வளவு முயன்றும், அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே. ஏன்?

பதில்: மிகவும் சாத்வீகமான ஒருவரை, நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடியாததற்கு காரணம், நம்முடைய மனதில் சாத்வீகம் இல்லாததே ஆகும். மஹாத்மா என்றவுடன், நம்முடைய மனது அதிசயங்களையும், மஹிமைகளையுமே எதிர்பார்த்து பழக்கமாகி விட்டதே இதற்கு காரணம்.

கேள்வி: பித்ருக்கள் (இறந்தவர்கள்) மறு உலகத்தில் வேதனையை அனுபவிப்பார்கள் என்கின்றார்களே! அது உண்மையா?

பதில்: நாம் உலக நடைமுறையை ஒட்டியே, இதற்கு ஒரு பதிலை காண்பதற்கு முயல்வோம். ஒருவர் சிறு வயது முதல், மது குடித்து குடித்து, அதற்கு அடிமையாகி விட்டார். அதனால் அவருடைய ஆரோக்யம் முழுவதுமாக கெட்டு விட்டது. குடும்பத்திலும் பல இன்னல்கள். அவர் அந்த மது பழக்கத்திலிருந்து தன்னை விடுவித்து கொள்ள முயல்கின்றார். ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் கூட, அவரால், மது அருந்தாமல் இருக்க முடியவில்லை; தவிக்கின்றார். அவரை, மது அருந்தும் நிலையிலிருந்து வெளிக்கொண்டு வரும் centre இலும், சேர்க்கின்றார்கள். அப்பொழுதும் முடியவில்லை. இது புரிகின்றது அல்லவா?

இப்பொழுது இறந்தவர்கள் விஷயத்திற்கு வருவோம். அவர்களுக்கு சரீரம் இல்லை; மனது உள்ளது. அந்த மனதில் ஆசை, போட்டி, பொறாமை, கோபம், பழிவாங்கும் எண்ணம் எல்லாம் அப்படியே உள்ளது. ஆனால் அவைகளை

வெளிப்படுத்தவோ, அனுபவிக்கவோ சரீரம் கிடையாது. அதனால் வேதனையாலும் இயலாமையினாலும் தவிக்கின்றார்கள். இதுவே நமக்கு நரக வேதனை அல்லவா? தனக்கு தானே உயிரை போக்கி கொண்டவர்கள், விபத்தில் மரணம் அடைந்தவர்கள், வேறு உலகத்திற்கு செல்ல முடியாமல் இந்த உலகத்திலேயே சுற்றி வருவார்கள். இந்த வேதனை தாங்காமல்தான், அவர்கள், யாருடைய சரீரத்திற்குள்ளாகவாவது புகுந்து கொள்கின்றார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களால், தெய்வ பக்தி உடைய, ஒருவருடைய சரீரத்திற்குள் புகுந்து கொள்ள முடியாது என்பதும் கவனிக்கத்தக்கது.

கேள்வி: நான், தினமும், சிலருடன் சேர்ந்து, தியானம் செய்து வருகின்றேன். எனக்கென்ன அறிவுரை?

பதில்: பலர் ஒரு இடத்தில் அமர்ந்து, தியானம் செய்து கொண்டு இருக்கின்றார்கள். அங்கு செல்பவர்கள் சிலர், தாங்களும் உடனே கண்களை மூடி தியானம் செய்ய ஆரம்பிப்பார்கள். அப்படி தியானம் செய்வதால் மட்டும், இறையனுபவத்தை பெற்று விட முடியாது. இறைவனை பார்க்க வேண்டும்; ஞானத்தை அடைய வேண்டும் என்ற தவிப்பும், ஏக்கமும் அதிகமாக வேண்டும். அத்தகைய வேட்கை அதிகமாக இருக்கும்பொழுது, அந்த இறையனுபவத்தை அடைவதற்கு, தியானம் ஒரு வழி. அத்தகைய ஏக்கம் இல்லாமல், தியானம் செய்ய அமர்ந்தால், தியானம் கை கூடாது. அதனால் அது தியானமே அல்ல. அந்த ஏக்கமும் வேட்கையும் நன்றாக வளர்வதற்கு, சத்சங்கம் அவசியம். சதா நாமகீர்த்தனம் செய்து வருவதும் அவசியம்.

---



முன் அட்டை – ஜனவரி 27, விருதுநகரில் புதிய நாமத்வார் திறப்பு. ஸ்ரீப்ரேமிகவரத திவ்ய தம்பதிகளுடன் ஸ்ரீஸ்வாமிஜி

பின் அட்டை – 5th Hindu Spiritual & Service Fair 2013 at AM Jain College, Meenambakkam, Chennai, Feb 21

# பகவானின் நாமம்

நாம் சொல்லி வரும் பகவந்நாமாவிற்கு உயிர் உண்டு. ஒருதரம் அந்த நாமாவை நாம் சொல்ல ஆரம்பித்தவுடன், அந்த நாமாவிற்கு, நம்மை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பும் கருணையும் வந்து விடுகின்றது. அந்த நாமா, ஒருவனை, பாதியில் கை விட்டு விடாது. அவனை முக்தி அடைய செய்து விட்டுத்தான் ஓயும். உண்மையான மஹான்கள், எப்பொழுதும் பகவத் தியானத்திலேயே ஆழ்ந்திருப்பார்களேயன்றி, யாரையாவது சீடர்களாக ஆக்கி கொள்ள வேண்டும் என்று நினைக்கவே மாட்டார்கள். அப்படி ஒருவர், தன்னை குரு என்று சொல்லிக்கொண்டு, சீடர்களுக்கு ஆசைப்படுவாரானால், அவர் குருவும் கிடையாது.

இது இப்படி இருக்க, ஒரு மனிதனோ, யார் மஹாத்மாவாக இருந்தால் எனக்கு என்ன ஆயிற்று என்று போவானே தவிர, ஒரு மஹாத்மாவிடம் தான் மாட்டிக்கொள்ள விரும்ப மாட்டான். இவைகள் இப்படி இருக்க, ஒரு உண்மையான மஹாத்மாவிற்கும் கூட சீடர்கள் அமைந்து விடுகின்றார்கள். இது எப்படி நடக்கின்றது என்றால், இவன் சொன்ன நாமாவிற்கு இவனை முக்தி அடைய செய்ய வேண்டும் என்ற பொறுப்பு வந்து விடுவதால், அந்த நாமாதான் இவனை ஒரு சத்குருவிடம் சென்று மாட்டி விடுகின்றது.

இந்த இந்த பாவங்களுக்கு, இந்த இந்த பிராயச்சித்தங்கள் செய்ய வேண்டும் என்று, தர்ம சாஸ்திரங்களில் மஹரிஷிகள் எழுதி வைத்திருக்கின்றார்கள். இருந்த போதிலும், நாம் செய்யும் நாமகீர்த்தனம், நாம் செய்த எல்லா பாவங்களுக்கும், ஸர்வ பிராயச்சித்தமாகிவிடும். இப்படி சொன்னவுடன், எல்லோருக்கும் ஒரு கேள்வி எழும். அப்படி என்றால், மஹரிஷிகள் எழுதிய பிராயச்சித்தங்கள் எல்லாம் வீண் என்று ஆகி விடுமே? பின், அவற்றை அவர்கள், ஏன் இவ்வளவு சிரமப்பட்டு எழுதி இருக்க வேண்டும் என்பதே அது. அப்படி சொல்ல முடியாது. அதற்கு

அதிகாரிகள் உள்ளனர். அவர்களுக்கு அது பொருந்தும். எந்த தர்ம சாஸ்திரத்தை மஹரிஷிகள் அருளினார்களோ, அவர்களே சன்யாசிகளுக்கு எந்த பிராயச்சித்தமும் கிடையாது என்று சொல்லி விட்டார்கள். நாமகீர்த்தனம் செய்யும் பாகவதர்களையும், அத்தகைய சன்யாசிகளுக்கு துல்யமாக ஸ்ரீமத் பாகவதம், பாகவத பரமஹம்ஸாள் என்று சொல்வதால், நாமகீர்த்தனம் செய்பவர்களுக்கும் பிராயச்சித்தம் தேவையில்லை என்பது நன்றாக தெளிவாகின்றது.

ப்ரேமைதான் பகவானை அடைய முக்யமான அம்சம். ஆனால், அந்த ப்ரேமை காமம் ஆகாமல், கவனமாக இருக்கவேண்டும். அதுபோல், விரக்தியும் வெறுப்பாக மாறாமல், கவனமாக இருக்கவேண்டும். பக்தியும் நடிப்பாகாமல் கவனமாக இருக்க வேண்டும்.

-பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் மதுரபுரி ஆஸ்ரமத்தில் நிகழ்த்திய உரையில் இருந்து கேட்டு எழுதியவர்: குள்ள ஹரி





# பாகவத பழம்

## பாகம் 2 – அத் 17

–ஸ்ரீஸ்வாமிஜி (36)

பூமியும் தர்ம தேவதையும் பேசிக்கொண்டிருப்பதை பார்த்த பரீக்ஷித், "சாஸ்திரமும், தர்மமும் தெரியாதவர்கள், பூமியை ஆளப்போவதை நினைத்து, பூமி அழுகின்றாள். அதனால் மக்கள் மத்தியில், எங்கும் எல்லாவற்றிலும் குளறுபடியே காணப்போகின்றது" என்பதையும் பரிக்ஷித் புரிந்து கொண்டான். இவர்களை துன்புறுத்துபவன், கலியுகத்தினுடைய புருஷன் என்பதையும் புரிந்து கொண்டு அவனை வெட்டுவதற்கு கத்தியை எடுத்தான். அப்பொழுது, அந்த கலிபுருஷன் நடுநடுங்கி, பரீக்ஷித்தின் கால்களில் விழுந்தான். பயந்த கலிபுருஷன் பரீக்ஷித்திடம், தாங்கள் ஆட்சி செய்கின்ற வரையில் தங்கள் ராஜ்யத்தில் நுழைய மாட்டேன்'' என்றான். "அதைத்தவிர நீங்களே சில இடங்களை நான் வசிப்பதற்கு என்று கொடுத்தால் கலியுகத்திலும் கூட நான் அங்கு மட்டுமே இருப்பேன்'' என்றான்.

உடனே பரீக்ஷித், "எங்கெல்லாம் போதை தரும் மதுவை அருந்து என்கிறார்களோ, அங்கெல்லாம் நீ இரு. இண்டாவதாக சூதாட்டம் நடக்கின்ற இடத்தில் நீ இரு. மூன்றாவதாக தவறான முறையில் பெண்களிடம் பழகுபவர் இடத்தில் நீ இரு. தர்மத்தில் விதிக்கப்படாத துன்புறுத்துவதை யார் செய்கின்றார்களோ, அங்கு நீ இரு'' என்று கூறி, அந்த கலிபுருஷனுக்கு நான்கு இடங்களை வாரித் தந்தான். ஆனால் கலிபுருஷனோ, "இவைகள் மட்டும் எனக்கு போதாது" என்று கூறி, மேலும் சில இடங்களை கெஞ்சி கேட்டுக் கொண்டான். உடனே, "தங்கம் எங்கு உள்ளதோ அங்கெல்லாம் நீ இரு" என்று கூறி, ஐந்தாவது இடத்தையும் கொடுத்தார். பொய், கர்வம் போன்றவையும், இந்த ஐந்தில் அடக்கம். ஆகவே, குருவாக யார் யாரெல்லாம் இருக்கின்றார்களோ, மற்றும் அரசனாகவும் இருக்கிறார்களோ

அவர்கள், மறந்தும், மேற்கூறிய ஐந்தில் ஒன்றில் கூட ஈடுபடக்கூடாது. இப்பொழுது, காளையின் மற்ற கால்களை சரியாக வைத்தான். துக்கப்பட்ட பசுவையும் சமாதானப்படுத்தி, ஆட்சி செய்து வந்தான். அந்த பரீக்ஷித் மஹாராஜா, ஆட்சி செய்து கொண்டிருக்கும்பொழுதுதான், இப்பொழுது நீங்கள் ஸத்ரம் என்ற யாகத்தை செய்வதற்கு, தீக்ஷை செய்து கொண்டவர்களாக உள்ளீர்கள் என்றார் ஸூதபௌராணிகர்.

## அத்யாயம் 18

ஸூதர் மேலும் சொல்லலானார். "பரீக்ஷித் தனது கடைசிக்காலத்தில், கங்கைக் கரையில், சுகரிடமிருந்து கிருஷ்ண கதையைக் கேட்டு, தனது சரீத்தை பயமின்றி விட்டான். கலிபுருஷன் பரீக்ஷித்தின் ராஜ்யத்தில் பயந்து இருந்தான். கலியுகத்தில் மனதால் நினைக்கக்கூடிய நல்லதிற்கு பலனுண்டு. ஆனால், மனதினால் நினைக்கக்கூடிய தீமைகளுக்கு பலன் கிடையாது. அந்தக் கலியும் விவேகிகளிடம் பயப்படுகின்றான். மேலும், நீங்கள் கேட்ட கதைகள் புண்ணியத்தைத் தரக்கூடியது'' என்றார்.

இப்படி சொன்ன ஸூதரைப் பார்த்து, சௌனகாதி ரிஷிகள் சந்தோஷித்து, "நீ பல்லாயிரக்கணக்கான வருடங்கள் ஜீவித்திருப்பாயாக'' என்று மனம் உவந்து ஆசிர்வதித்தார்கள். இந்த யாகத்தின் புகையால் வருத்தப்படும் எங்களுக்கு, நீ சொன்ன கதை அம்ருதம் போல் உள்ளது. உண்மையாக பகவத் பக்தர்களின் சேர்க்கையால் கிடைக்கும் ஆனந்தம், ஒரு க்ஷணம் ஆனாலும் அதற்கு ஸ்வர்கமோ, மோக்ஷமோ கூட ஈடாகாது. ப்ரஹ்மா, ருத்ரன் போன்ற யோகீஸ்வரர்கள் கூட, நாராயணனுடைய குணத்தின் எல்லையைக் காண முடியாதபொழுது, நாங்கள் எம்மாத்திம். நீங்கள் சொன்ன பிறகும், மேலும் மேலும் கேட்கவேண்டும் என்ற ஆவல் வருகின்றதே தவிர, நாங்கள் திருப்தி அடைந்தவர்களாக இல்லை. மேலும், கதையைத் தொடர்ந்து சொல்லும்'' என்றனர்.

"ரிஷிகளான நீங்கள் என்னையும் மதித்துக் கொண்டாடுகின்றீர்கள். சுகர் போன்ற ஞானிகளுடன் சம்பந்தப்பட்டதால்தான், எனக்கு இத்தகைய நிலை சித்தித்து இருக்கின்றது என்றே நான் நினைக்கின்றேன். எந்த

வாஸுதேவனின் பாதத்தில் உண்டான கங்கையானது சிவனோடு கூடிய உலகத்தையே பவித்திரமாக்குகின்றதோ, அப்பேற்பட்ட வாஸுதேவனைத் தவிர பகவான்' என்ற சப்தம் வேறு யாருக்குத்தான் பொருந்தும்? ஒரு பறவை அதனுடைய சக்திக்குத் தக்க உயரம்தான் பறக்க முடியும். அதுபோல், அவரவர்களும், அவரவர்களால் முடிந்த அளவிற்குத்தான், வாஸுதேவனுடைய மஹிமைகளைக் கூறுகின்றனர். வாஸுதேவனிடத்தில் பக்தி செய்ய ஆம்பித்தவர்கள், சீக்கிரமே உலகப்பற்றுதலை விட்டு, ஞானத்தை அடைந்து பரமஹம்சர்களாகி விடுகின்றார்கள்" என்ற சூதர் மேலும் தொடர்ந்தார்.

வேட்டையாடச் சென்ற பரீக்ஷித், வெகுதூரம் ஓடிய களைப்பால் தாகத்தை அடைந்தான். எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. அப்பொழுது ஒரு ஆசிரமத்தைப் பார்த்தான். அங்கு சமீகர் என்றொரு ரிஷி விரித்துவிடப்பட்ட சடைகளோடும் ருரூ என்ற மானின் தோலால் மூடப்பட்டவராய், சமாதி கைகூடியவருமாக இருந்தார். அவரை அணுகி குடிக்க தண்ணீர் கேட்ட பரீக்ஷித்திற்கு அவரிடத்திலிருந்து ஒரு பதிலும் வராததால், தன்னை அவர் அவமதித்ததாக நினைத்தான். அவனுக்கு அவரிடம் கோபம் உண்டானது. சரி! தன்னால் முடியாத ஒன்றை வேறு யாராவது செய்தால், அதுவும் தெய்வீக வாழ்க்கையில் பொறாமை உண்டாகுமாம். "என்னடா இவர் இப்படி சிலை போன்று உட்கார்ந்துள்ளாரே? நம்மால் ஒரு நொடி கூட இப்படி உட்காரமுடியாதே" என்று நினைத்தான். பக்கத்தில் கிடந்த ஒரு இறந்த பாம்பைத் தூக்கி, அவர் கழுத்தில் போட்டான். சிவபெருமான் தலையை சுற்றிக் கொண்டிருக்கும் பாம்பைப் போல், அது இருந்தது.

நல்ல வம்சத்தில் பிறந்து, கருவிலேயே வாஸுதேவனுடைய தரிசனத்தை அடைந்த பரீக்ஷித், ஸாதுவிடம் அபசாரம் செய்தான். ஒருக்கால், கலிபுருஷனை அன்று பார்த்து உரையாடினானே, அதன் பலனாக இருக்குமோ?

(கனியும்)

# அனுபவம் 2
# –மரணத்திற்கு பின்

–ஸ்ரீபத்மபாதர்

மரணத்திற்குப் பிறகு, ஏதோ ராக்கெட்டில் ஏறிச் செல்வதுபோல், எல்லோரும் அப்படியே ’டக்’கென்று வைகுண்டமோ, கைலாசமோ கிளம்பிப் போவோம் என்று நினைக்கின்றார்கள். ஆனால், அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. பூமியில் நாம் பிறக்கையில், அப்படியே ’பொத்’ என்று வந்து விழுந்து விடுவதில்லை. பிறப்பதற்கு முன், நாம் பத்து மாதங்கள் தாயின் வயிற்றிலிருந்தோம். அதற்கு முன், தந்தையிடம் வந்தோம். அதற்கு முன், தாவரங்களில் இருந்தோம், மழை ஜலத்திலிருந்தோம், மேகத்திலிருந்தோம், இப்படித்தான் நாம் பூமிக்கு வருகின்றோம். இதற்கெல்லாம் ஒரு க்ரமம் இருக்கின்றது. அதை மீற முடியாது. அப்படியேதான், மரணத்திற்குப் பின், திரும்பிச் செல்வதற்கும் ஒரு க்ரமம் இருக்கின்றது. அந்த க்ரமப்படித்தான் செல்லமுடியும். முதலில் இந்த யாதனா சரீரம் என்று சொல்கின்றார்களே, அது உடலில் இருந்து பிரிந்து விடும். இறந்தவுடன் எல்லோருக்கும், கடவுளின் தரிசனம் எல்லாம் ஏற்பட்டு விடாது. அவரவர்கள் சில இடங்களுக்குத்தான் செல்ல முடியும்.

ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், நமது வீட்டிற்கு வரும் அனைவரையும், வீட்டிற்கு உள்ளே அழைத்துச் செல்வதில்லையே! சில நபர்களை வாசலுடன் அனுப்பி விடுகின்றோம்; சிலரை வராண்டா வரையும், சிலரை ஹால் வரையும், ஒரு சிலரை டிராயிங் ரூம் போன்று வேறு ஒரு அறைக்கு அழைத்துச் செல்கின்றோம். ஆனால் ஒருவரையும் படுக்கை அறைக்கோ அல்லது பீரோ அருகிலோ, கூட்டி செல்வதில்லை. ஏன்? இதற்கெல்லாம் தகுந்த காரணங்கள் இருக்கின்றதல்லவா? அப்படித்தான், மரணத்திற்கு பின் எல்லோரும் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது.

வாசலிலேயே சிலரை அனுப்பி விடுவது போல், பெரும்பாலானவர்கள் சொர்க்க நரகங்களுக்கோ, அல்லது பித்ரு லோகத்திற்கோ சென்று வருவர்.

அப்படி செல்பவர்களுக்கு நாரதர் போன்று மகரிஷிகள் இருப்பதோ, அல்லது நாராயணனோ அல்லது சிவனோ அல்லது இந்திரன் போன்று பல தேவர்களோ, கந்தர்வர்களோ, யஷர்களோ அல்லது வேறு உலகங்களோ தெரிய மாட்டார்கள். அவர்கள் இருக்கின்றார்கள் என்ற அறிவும் கூட ஏற்பட்டு விடாது. ஒன்றுமே காண்பிக்கப்படவும் மாட்டாது. வீட்டிற்கு வரும் ஒரு நபரை அவரது தகுதிக்கு தகுந்தாற்போல், எப்படி அங்கங்கேயே வைத்து பேசி அனுப்புகின்றோமோ, அதுபோலவே, பலரும் தம்தம் இடங்களுக்கு சென்று வருவர். உயிர் பிரிந்தவுடன், பெரும்பாலும் 90 சதவிகித நபர்கள், பக்கத்திலேயே உள்ள பித்ரு லோகத்திற்கு சென்று வந்து விடுவோம். இதைத்தாண்டி செல்பவர்கள் மிக மிக குறைந்தவர்களே.

இப்பொழுது, நம்மில் பலர் நாத்திகராக இருக்கிறார்கள். அவர்கள் கடவுளை நம்புவதில்லை. உயிர் பிரிந்தவுடன், அவர்கள் எல்லாம் கடவுள் நம்பிக்கை இருக்கிறவர்களாக மாறிவிட மாட்டார்கள். இப்படி உயிர் பிரிந்து, மறுபடி பிறவி எடுக்கும் வரை கூட சிலர் நாத்திகராகவே இருக்கலாம். அவர்களும் ஏதோ ஒரு லோகம் சென்று விட்டு வருகையில், "ஓகோ! இது மட்டும்தான் இருக்கிறது போலிருக்கிறது" என்று நினைத்து கொள்வார்கள். எதுவரையில் ஒருவருக்கு அனுபவம் ஏற்படுகிறதோ அவ்வளவுதான் இந்த உலகம் என்று நினைப்பர்.

வேண்டுமானால் ஒன்று சொல்லலாம். செத்து போய் விட்டால், அதனுடன் வாழ்க்கை முடிந்து விடுகிறது என்று நினைத்த நாத்திகன் இறந்தபின்னும், நாம் இன்னும் இருக்கிறோம் என்பதை மட்டுமே உணர்வான். சரீரம் மரிப்பதுடன், வாழ்க்கை முடிவதில்லை என்பதை மட்டும் அறிவான்.

இது போலவே, இறந்த பின் ஒருவருக்கு ஞான, பக்தி, வைராக்கியங்கள் எல்லாம் ஏற்பட்டு விடும் என்றும் சொல்ல முடியாது. ஏன், ஏற்படவே ஏற்படாது! இப்பொழுது எப்படி

இருக்கிறோமோ, அப்படியேதான் மறுபிறவியில் இருப்போம். அதனால்தான், மறுபிறவி எடுக்கையில், நாம் ஞான, பக்தி இல்லாததால் திரும்பவும் மாயை வலையில் மாட்டிக்கொண்டு பாசத்தில் உழல்கின்றோம்.

விபத்தில் (ஆக்சிடெண்ட்) இறப்பவர்களுக்கு, சரீரத்தில் வலி ஏற்படுகிறது. ஆனால் இறந்த பின், இந்த வலி போய் விடும். மறு பிறவியில் இது தொடரவும் தொடராது. ஆனால் ஒருவருக்கு மனதில் டிப்ரஷன் இருக்கிறது என்றாலோ, அல்லது யார் மேலாவது கோபமோ அல்லது பழி வாங்கும் உணர்ச்சிகள் இருந்தாலோ, அவை எல்லாம் அப்படியே இருக்கும். அது மறுபடி மறுபிறவியில் வரும்.

ஏனெனில் மனோ வியாதிகளும், மனது சம்பந்தப்பட்ட விஷயங்களும், இவனுடன் இந்த யாதனா சரீரத்துடனேயே வரும். அவை அழியவே அழியாது. அது மனதிலேயே இருக்கும். அது போலவே ஒருவன் கற்றுக்கொண்ட விளையாட்டு சம்பந்தப்பட்ட விஷயங்களோ, சங்கீத சாஸ்திரமோ அல்லது அறிவியல் சம்பந்தமாக, அவன் என்னவெல்லாம் கற்றுக் கொண்டானோ, அவை எல்லாம், அவனுடன் கூடவே இருக்கும். இவை எல்லாம், அவனுடைய விஞ்ஞானமய கோசத்திலேயே இருப்பதால், அது அவனுடனேயே இருக்கிறது. அப்படியே இவன் என்னென்ன பழக்கங்கள் பழகி கொண்டானோ, அது எல்லாம் அப்படியே இருக்கும். இவன் செய்த நல்ல காரியங்களும், கெட்ட காரியங்களும் இவன் மனதிலேயே இருக்கும். அதாவது காம, கோப, பயம் போன்ற உணர்வுகளும், இரக்கம், தயை போன்ற உணர்வுகளும் இவன் மனதிலேயே இருக்கும். அவை தொடர்ந்து வரும்.

மனதிலும் அறிவிலும் ஏற்றிக்கொண்ட விஷயங்கள் அழிவதில்லை. எத்தனை பிறவிகள் ஏற்பட்டாலும், அவை கூடவே வரும். மனதில் உள்ளே இவை இருப்பது தெரியாவிட்டாலும், சில சமயங்களில் வாசனைகளாக இவை வெளிப்பட செய்யும். சரீர சம்பந்தமான தொல்லைகள் இவனைத் தொடராது. அவை சரீரத்துடன் அழிந்து விடும்.

# நாமம் சொல்வதற்கு தடை எது?

–குள்ள ஹரி

பல மாடிகள் கொண்ட ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஒன்றை, என் நண்பர் கட்டி கொண்டிருந்தார். அதை பார்ப்பதற்காக என் நண்பர் என்னை அழைத்து சென்றார். அப்பொழுது, கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. மேல் மாடியில், வேலை செய்வதற்கு வேண்டிய மணல், மற்றும் தேவையான பொருள்களை சிலர், தலைகளில் தூக்கி கொண்டு ஏறி கொண்டிருந்தனர்.

ஒரு நாள், சில நோட் புத்தகங்களை என் தலைமேல் வைத்துக்கொண்டு, சில நிமிடங்கள், நின்று கொண்டு இருந்ததற்கே, நம் கழுத்து வலித்ததே. இவர்களால் எப்படி இப்படி வேலை செய்ய முடிகின்றது; பாவம்! இவர்களுக்கு எப்படி வலிக்கும் என்று நினைத்து கொண்டேன்.

ஒருநாள், என்னுடைய நண்பர், அவருடைய நண்பர் ஒருவர் வீட்டிற்கு அழைத்து சென்றார். அவர்கள் வீட்டில், ஒரு கல்லூரி படிக்கும் மாணவன், டூவீலர் ஆக்சிடெண்டில் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக உள்ளான். கோமா நிலையில் உள்ளான். பல வருடங்களாக இப்படியே உள்ளான். பெற்றோர்களுக்கு, அவன் ஒரே குழந்தை. அவர்களும் செல்வந்தர்கள். அவர்கள் போகாத கோவில் இல்லை. வேண்டாத தெய்வமில்லை. செய்யாத பரிகாரமில்லை. அந்த குழந்தையின் நிலையை பார்த்து பார்த்து, அழுகின்றனர்.

மலையை "பாம்(குண்டு)" வைத்து பெயர்த்து கல் உடைக்கின்றார்கள். கொதிக்கின்ற வெய்யிலில், தாரை கொதிக்க வைத்து ரோடு போடுகின்றார்கள். குடும்பத்தில் பணம் இல்லாததால் கஷ்டம், வியாதியால் கஷ்டம், மனோவியாதியால் கஷ்டம், குடும்பத்தில் உள்ளவர்களிடையே ஒற்றுமை

இல்லாததால் கஷ்டம், இப்படி கஷ்டத்திற்கான காரணத்தை சொல்லிக்கொண்டே போகலாம். இவற்றை எல்லாம் சிந்தித்து கொண்டே இருந்தேன்.

பகவான் கோபாலன் அருளை பெறுவதற்கு, மேலே சொன்னது போல், ஏதாவது கஷ்டப்பட வேண்டுமா? அல்லது மேலே உள்ளது போல் துன்பங்கள் உண்டா?

எளிமையான வழி. எதையும் மாற்றி கொள்ள வேண்டாம். புதியதாக எதையும் மேற்கொள்ளவும் வேண்டாம். வாயினால், மஹாமந்திரம் சொல்லி கொண்டிருந்தாலே போதும்.

ஆனால் நாம் சொல்கின்றோமா? சும்மா நின்று கொண்டிருப்போம். சும்மா உட்கார்ந்து கொண்டிருப்போம். எதையாவது வேடிக்கை பார்த்து கொண்டிருப்போம்.

ஆனால் நாமா சொல்ல மாட்டோம். பத்து நிமிடங்கள் சேர்ந்தாற்போல், நாமா சொல்லுதற்கு துப்பு கிடையாது. பொறுமையும் கிடையாது. ஆனால் இவர்களுக்கு தாங்கள் ஜீவன் முக்தர்கள் ஆகி விட வேண்டும் என்று ஆசை! என்ன விபரீதம்!!

நாமத்தை விட்டு விட்டு ஏதாவது மந்திரங்களின் மேல் மோகம். காரணம் என்ன? நாமா சாத்வீகமானது. பெரும்பாலான மந்திரங்கள் ராஜசமானது. மனதில் சாத்வீகம் இல்லாததே இதற்கு காரணம்.

நாமா சொல்ல ஆரம்பிக்கும்பொழுதே, கடிகாரத்தில் நேரத்தை நேரத்தை பார்த்து கொண்டு இருப்பதுதான் பாவம். நாமா சிறிது நேரம் சொன்னவுடன், நாம் இன்று எதையோ சாதித்து விட்டதாக நினைப்பது, அதை விட பாவம். வழி எளிமையானதுதான். ஆனால் அதை நாம் செய்யாமல் இருக்கின்றோம் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்.

நம்முடைய பாவம்தான், நம்மை நாமம் சொல்ல விடாமல் தடுக்கின்றது என்பதை விட, அது வேறு என்னவாக இருக்க முடியும்?

# *ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 2*

சென்னை ராமகிருஷ்ணா மடம் – ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

அவதார புருஷர்கள் அனைவரும் மஹான்களே; ஆனால் மஹான்கள் அனைவரும் அவதார புருஷர்கள் ஆக மாட்டார்கள். நரசிம்ம, ராம, கிருஷ்ண அவதாரங்களை பார்த்தால் தேவர்கள் பகவானை பிரார்த்தித்ததினால்தான், பகவான் அவதாரம் செய்கிறான் என்று தெளிவாக இருக்கிறது.

பிரும்ம ஸ்வரூபமான பகவானிடம் ஒருவர் இன்ன காரணத்திற்காக அவதாரம் செய்ய வேண்டும் என்று பிரார்த்திப்பது அவசியமாகிறது. பிரும்மாவை முன்னிட்டு பூமிதேவி பூபாரத்தை குறைக்க வேண்டி செய்த பிரார்த்தனைக்கு இரங்கி, கிருஷ்ணன் பிறந்தான் என்கிறது பாகவதம். கலியுகத்தில் ஏற்படும் சாதுக்களான பகவானின் அவதாரத்திற்கும் அப்படி ஒரு காரணம் தேவைப்படுகிறது.

ஆதிசங்கரர் பிறந்த காலத்தில், பௌத்த மதம் பரவி எங்கும் மாயாவாதம் பிரசித்தியாகி இருந்தது. அதுபோலவே சமணம் பரவி எங்கும் "அஸ்தி நாஸ்தி" பிரச்சாரம்தான் நிரம்பி இருந்தது. வேதமார்க்கத்தை கடைப்பிடித்தவர்கள் கூட, சன்யாசம் வேத விரோதம் என்றும், உபநிடதத்தில் சொல்லியதை தள்ளி விட்டு, கர்ம காண்டத்தை மட்டும் கடைபிடிப்பவர்களாய் பூர்வ மீமாம்ஸகர்களாக இருந்தனர். இதை எல்லாம் விட, அக்காலத்தில் மக்கள் சிவ, ஹரி பக்தி செய்வதை விட, விஷ்ணு, சிவ த்வேஷம் கொண்டாடுபவர்களாக இருந்தனர். இத்தகைய காலத்தில்தான் ஆதிசங்கரர் அவதரித்து, 32வருடங்களுக்கு உள்ளாக பாரதம் முழுவதும் சஞ்சரித்து, இவை எல்லாவற்றையும் சீரமைத்து விட்டு, சனாதன மதத்திற்கு புத்துயிர் தந்து விட்டு போனார்.

ராமானுஜரின் அவதாரமும், ஒரு காரணத்தை முன்னிட்டே ஏற்பட்டது. அந்த அவதாரம், முக்கியமாக

கோவில்களை காப்பாற்றி கொடுப்பதற்காகவும், அர்ச்சாவதார வழிபாட்டு முறைகளை காப்பற்றுவதற்காகவும், ஏற்பட்டதாகும். அது போலவே ராமகிருஷ்ணர் அவதாரம் செய்ததற்கும் காரணம் இருந்தது.

அந்த காலத்தில் பிரிட்டிஷார், ஈஸ்ட் இந்திய கம்பெனி என்ற பெயரில், வியாபாரம் செய்ய வந்தனர். முதலில் அவர்கள் வங்காளம் வழியாகத்தான் வந்தனர். அவர்கள் வந்து பார்க்கையில், பாரதம் முழுக்க சிற்றரசர்களாகவும், அவர்களிடையே ஒற்றுமை இல்லாததாகவும், அன்னிய படையெடுப்புகளால் தேசம் மிகவும் பாதிப்படைந்து இருப்பதையும் கண்டனர். அவர்கள் அத்தகைய சூழலில் எளிதில் நாட்டை தங்கள் வசமாக்கி அடிமையாக செய்தனர். இதனால் வெளிநாட்டு கலாசாரம் இங்கு வெகுவாக பரவியது.

இது மட்டுமல்லாமல் பாரதீய பண்பாடுக்கான மதிப்பு, வெகுவாக குறையவும் ஆரம்பித்தது. வெளிதேசம் சென்று, வக்கீலுக்கு படிப்பதுவும், அவர்கள் போல் கோட், சூட் ஆடை அணிவதுவும், நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுவதும்தான், பெரிதும் கௌரவமாக மதிக்கப்பட்டது. மறுபுறத்தில் ராமாயண, மஹாபாரத, பாகவதம் போன்ற புராணங்கள் எல்லாம் கட்டுக்கதைகள்; அவை உண்மையில் நிகழ்ந்தவை அல்ல என்ற துஷ்பிரச்சாரமும் வெகுவாக பரவியது. மக்கள் அர்ச்சாவதாரத்தை பூஜை செய்தாலோ, திருநீறு, திருமண் போன்ற நெற்றி திலகங்கள் அணிந்திருந்தாலோ, கேலியும் பரிஹாசமும் செய்ய ஆரம்பித்தனர். பாரதீய கலாசாரம் அழிந்து போக ஆரம்பித்தது மட்டுமல்லாமல், பாரதீய கலாசாரத்தை பழிப்பதுதான் கௌரவம் என்ற நிலை வர ஆரம்பித்தது.

இப்படிப்பட்ட சூழலில், மஹரிஷிகளால் தொன்று தொட்ட காலம் முதல் ஸ்தாபிக்கப்பட்ட, இந்த சனாதனமான புனித மதம் கேலிக்கும் பரிஹாசத்திற்கும் உள்ளாகிறதே என்று பல பெரியோர்கள் பரிதவிப்பில் இருந்தனர். பிரும்ம சமாஜமும், ஆர்ய சமாஜமும், அப்படிப்பட்டவர்களால்தான் தோற்றுவிக்கப் பட்டது. இந்த சனாதன மதத்தை கொஞ்சமாவது காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் நினைத்தனர். அவர்களால் அதில்

வெற்றி பெற முடியவில்லை. சனாதனமான மதம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக, பலர் பகவானிடம் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி, எற்பட்ட அவதாரம்தான் ராமகிருஷ்ணரின் அவதாரம். ராமனாகவும், கிருஷ்ணனாகவும் வந்த பரம்பொருள்தான், ராமகிருஷ்ணராக வந்தது.

அவதாரங்களை அம்ச, கலாவதாரங்கள் என்று சொல்வதுண்டு. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக வருவது அம்சாவதாரம். ராமர், கிருஷ்ணர் போல் பூமியில் பிறந்து வாழ்ந்து விட்டு சென்றால், அதை பூர்ணாவதாரங்கள் என்பர். 16கலைகள் இருந்தால்தான், பூர்ணாவதாரம் என்று சொல்ல முடியும். அதனால்தான், பூஜையிலும் ஷோடச பூஜை (16விதம்) என்று வைக்கப்பட்டுள்ளது. ராமகிருஷ்ணர் பூர்ணாவதாரம் என்பதற்கு, நிரூபணம் உள்ளது. ராமகிருஷ்ணரை சுற்றி 16துறவிகள் இருந்ததே இதற்கு நிரூபணம்.

(தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology, Diabetes & Metabolism
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New No. 228, old No. 169, R.K.Mutt Road,
Mandaveli, Chennai - 600 028
(Next to Ravi Pharmacy)

ADVT Ph - 044 - 24950090, Mob - 9840488777


# மழை வேண்டி நாம மழை

தமிழகத்தில் பல நாட்களாக மழை இல்லாமல் இருந்து, அதனால் பயிர்கள் வாடுவதும், மக்கள் குடி தண்ணீர் இல்லாமல் தவிப்பதும், நாம் அன்றாடம் கேள்விப்பட்டு வரும் செய்தியாக அமைந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசிக்க வரும் பல அன்பர்கள் தத்தம் ஊர்களில் மழை பொழிய வேண்டும் என்று பிரார்த்தித்து வந்தவாறே இருந்தனர். இதற்காக மழை வேண்டி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிப்ரவரி 13லிருந்து 19வரை நாமகீர்த்தனத்தை சப்தாஹமாக அனைத்து இடங்களிலும் தமிழ்நாட்டில் செய்ய சொல்லி ஆக்ஞாபித்தார்கள். அதன்படி அனைத்து நாமத்வார் மையங்களிலும், காட் சத்சங்கங்களிலும் அகண்டமாக காலை 6மணி முதல் மாலை 6மணி வரை, ஹரே ராம மஹாமந்திர நாமகீர்த்தனம் ஏற்பாடு செய்யப்பட்டது. மழைக்காக வேண்டி பிரத்யேகமாக இது நடத்தப்பட்டது. சுமார் 75இடங்களில் 20000க்கும் மேற்பட்ட அன்பர்கள் இதில் கலந்து கொண்டனர். இதனால் இறைவன் மகிழ்ச்சி அடைந்தான் என்பதற்கு அடையாளமாக, நாமா துவங்கிய தினத்திலிருந்து, எல்லா இடங்களிலும் பரவலாக மழை பொழிந்து தள்ளியது குறிப்பிடத்தக்கது.

மழை சீசனே இல்லாத இந்த காலத்தில் மழை பொழிந்து தள்ளியதை பத்திரிக்கைகளும் ஊடகங்களும் வெகுவாக சுட்டிக்காட்டி விவரங்களை தெரிவித்தன. பயிர்களுக்கு நீர் கிடைத்ததும், அணைகள் நிரம்பியதும், குடிதண்ணீர் கிடைத்ததும் ஊரறிந்த விஷயம். அவ்வவ்வூரில் இருந்த அன்பர்கள் நாமத்திற்கும் குருநாதருக்கும் பகவானிற்கும் நன்றி தெரிவித்து, நாம கேந்திரங்களில் விவரங்களை சொல்லி ஆனந்தப்பட்டனர்.

நாமம் சொல்லி பிரார்த்தித்தால், இறைவன் அருளியே தீருவான் என்பதற்கும் கூடி இருந்து பிரார்த்தித்தால் சமூகத்திற்கே நன்மை செய்யலாம் என்பதற்கும், இது ஒரு நிரூபணமாகவும் அமைந்தது. நீரின்றி அமையாது உலகு என்பது ஆன்றோர் வாக்கு. அதுபோல் நாமமின்றி அமையாது பிரார்த்தனை என்று சொன்னால், பொருத்தமாகத்தான் இருக்கும் அல்லவா?

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

* ராவணன், பஸ்மாஸுரன், ஹிரண்யகசிபு போன்ற அசுரர்கள் கூட கடுமையாக தவம் செய்துள்ளார்கள். ஆனால் அவர்களால், பக்தி மட்டும் செய்ய முடியவில்லை. பிடிவாதம் இருக்குமானால் சாப்பிடாமல் இருந்து விடலாம். தூங்காமல் இருந்து விடலாம். நின்று கொண்டே இருந்து விடலாம். ஒரே இடத்தில் அமர்ந்திருக்கலாம். மேனியில் சிலிர்ப்போ, கண்களில் ஆனந்த கண்ணீரோ, குரல்களில் தழுதழுப்பையோ, மேனியில் நடுக்கத்தையோ, பக்தி மூர்ச்சையையோ, ஹ்ருதயத்தில் ஆனந்தத்தையோ ஒருவர் பிடிவாதத்தால் கொண்டு வந்து விட முடியாது.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி


வீட்டு மனைகள்
விற்பனைக்கு

மேலும் சில மனைகளே உள்ளன.

(PLOTS FOR SALE AT)

ஸ்ரீப்ரேமிக வரதன் நகர், மாஹாரண்யம்

சிறப்பு அம்சங்கள்

* மலைகளும் ஏரிகளும் அமைந்த இயற்கை வளம் பெற்ற சூழல்
* LAYOUT AREAவில் முழுமையான COMMON COMPOUND WALL மற்றும் விசாலமான தார் சாலைகள்
* உடனடியாக வீடு கட்டி குடியேற வசதியான இடம்

(For Details contact)
'VIJAY ASSOCIATES ' PH:9940043234

A-1 VIJAY VATICA, # 18/33, SARAVANA STREET, T-NAGAR,
CHENNAI 600 017. PH: 9940043234

ADVT

## பகுதி 49 - கேள்விகள்

1. மனுவின் புதல்வியின் பெயர் என்ன? புதல்வி யாரை மணந்தார்? அவரது புதல்வனின் பெயர் என்ன?

2. திரௌபதி, த்ருஷ்டத்யும்னன் யாருடைய தவ வலிமையால் பிறந்தார்கள்?

3. ப்ரஹஸ்பதியின் புதல்வனான கசன், சுக்ராச்சாரியாரிடம் இருந்து கற்ற வித்தையின் பெயர் என்ன?

4. கர்ணனின் புதல்வர்களை யுத்தத்தில் யார் கொன்றார்கள்?

5. கல்கி அவதாரம் பற்றிய குறிப்புகள், மஹாபாரதத்தில் எங்கு காணப்படுகின்றன?

6. காம்போஜ தேசத்து குதிரைகள், யாருடைய ரதங்களில் பூட்டப்பட்டு இருந்தன?

7. ராஜரிஷி உசீனரரின் பெண் பெயர் என்ன? யாரை மணந்தாள்? தனது கணவனை யாருடைய பசுவை அபகரிக்கச் சொன்னாள்?

8. த்ருஷ்ட கேது யார்? யாரால் கொல்லப்படுகிறான்?

9. ராஜஸூய யக்ஞத்தின் போது, லங்கை அரசனிடம் இருந்து கப்பம் பெறுவதற்கு, சகாதேவன் யாரை அனுப்பினான்?

10. அஹிம்சையை போதிப்பவரும், ஹிம்சையை கடுமையாக கண்டிப்பவருமான ஓர் அரசர் இருந்தார். அவர் பெயர் என்ன?

## பகுதி 49 - விடைகள்

1. ஆருஷி; ச்யவன முனிவரை மணந்தாள். புதல்வனின் பெயர் ஔர்வா; அவனது தாயின் துடையில் இருந்து தோன்றியவன்.

2. யாஜர்; அவரது சகோதரர் உபயாஜர்; இவர்களது தவ வலிமையால்.

3. சஞ்ஜீவினி வித்யா (இறந்தவர்களை பிழைக்கச் செய்யும் வித்யா)

4. பானுசேனனை பீமன்; சுஷேனணை உத்தமௌஜன்; ப்ரசேனனை சாத்யகி;

## சனாதனப்புதிர் பகுதி 49 -
## விடைகள்- ஆத்ரேயன்

வ்ருஷசேனனை அர்ஜுனன்;

5. சபா பர்வா; வன பர்வா; சாந்தி பர்வா

6. யுதிஷ்டிரர்; நகுலன்

7. ஜிதவதி; த்யோ என்ற வஸு; நந்தினி என்ற பசுவை; இது வசிஷ்டரிடம் இருந்தது.

8. சேதி தேசத்து அரசனான சிசுபாலனின் மகன். யுத்தத்தின் துரோணாச்சாரியாரால் கொல்லப்படுகிறான்.

9. பீமனது மகனான கடோத்கஜனை.

10. விசக்னு - சாந்தி பர்வம்.


Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

ADVT

Our products

Globe Tipper
Unit Converter
Smart Alarm Pro
DRACO, The Dragon

Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று -11



திரு.எஸ்.ராஜப்பன்

13.01.2012 வெள்ளிக்கிழமையன்று, பெரம்பூரிலுள்ள, ஸ்ரீவெங்கடேஸ்வரா பக்த சமாஜத்தில் கொலுவீற்றிருக்கும் திருவேங்கடவன் என்கின்ற ஸ்ரீஸ்ரீநிவாசப்பெருமாளை சேவித்துவர, ஸ்ரீஸ்வாமிஜியின் அன்புக்கட்டளை பெறப்பெற்றது. 10.10.1970இல் துவக்கப்பட்ட இந்த பக்த சமாஜம், பெரம்பூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் படேல் சாலையில் "ஆனந்த நிலையம்" எனும் பெயர் கொண்ட கதவிலக்கம் 124ல் அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் ஸ்ரீஸ்ரீநிவாசப்பெருமாள், ஸ்ரீதேவி, ஸ்ரீபூதேவி இவர்களின் பெரிய ஃப்ரேம் செய்யப்பட்ட படங்களே, மூலவர் மூர்த்திகளாக பாவிக்கப்பட்டு, வழிபாடு நடைபெற்றுவந்துள்ளது. 1997 செப்டம்பரில், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் மான்ய விலையில், உருவாக்கி, இந்த சமாஜத்திற்கு அளிக்கப்பட்ட ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி இவர்களின் திவ்ய மங்கள விக்கிரகங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீ ஆஞ்சனேய மூர்த்திக்கும் ஓர் சிறிய அழகிய விக்ரஹம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.30 மணிக்கு, ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதமும், 7 மணிக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வர, ஸ்ரீமஹாலக்ஷ்மி, ஸ்ரீஆஞ்சனேய அஷ்டோத்ரங்கள் பக்தர்களால் பாராயணம் செய்யப்படுகிறது. பின்பு, பகவானுக்கு ப்ரஸாத நைவேத்யமும் , திருவாராதனம், தீபாராதனையும் நடைபெறுகின்றன. முடிவில், பக்தர்களுக்கு ப்ரஸாதம் வழங்கப்படுகின்றது. காலை 8மணிக்கு திரை சாத்தப்படுகிறது. மாலை 6.30 மணிக்கு, விஷ்ணுசகஸ்ர நாம பாராயணம் செய்யப்படுகின்றது. இரவு 7.15 முதல் 7.30 மணி வரை " ஒம் ஸ்ரீவேங்கடேசாய நம: " த்யானமும், 7.30 முதல் 7.45மணி வரை, அஷ்டோத்திரங்கள் ஜபித்தலும், நடைபெறுகின்றன. 7.45 மணிக்கு திரை போடப்படுகிறது. 15 நிமிடங்களுக்கு, நமது சத்குருநாதர் ஸ்ரீஸ்வாமிஜியின்

ஆக்ஞைப்படி, மஹாமந்திர கீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை செய்யப்படுகின்றது. இரவு ப்ரஸாதம் நிவேதனம் செய்யப்பட்டு, தீபாராதனை காட்டப்படுகிறது. பின்பு நடை சாத்தப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டு இராமநவமி உத்ஸவத்தின்போது, நமது சத்குருநாதர் இந்த சமாஜத்திற்கு விஜயம் செய்து, பெருமாளை சேவித்து, மங்களாசாசனம் செய்து மூன்று தினங்கள் "மஹா பக்த விஜயம் " என்னும் தலைப்பில் உபன்யாசம் செய்து பக்தர்களுக்கு ஆசி வழங்கியுள்ளதை இந்த சமாஜ நிர்வாகிகள், பெருமிதத்துடனும் நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கின்றார்கள். இங்கு நம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடுத்து, தமது திருக்கமலப்பாதங்களைப் பதித்து ஆசி வழங்கப்போகும் அந்தப் பொன்னான நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை நிர்வாகிகள் கூறும் பொழுது, இவர்களது ஆர்வமும் மரியாதையும் நம்மை வியக்க வைக்கிறது.

இங்கு ஆண்டு தோறும் புரட்டாசிமாதம் ஸ்ரீஸ்ரீநிவாச கல்யாணம், ஸ்ரீராமநவமி வைபவம், வஸந்தோத்ஸவம், பஞ்சமிதீர்த்த வைபவம், புஷ்பயாகம் போன்ற உத்ஸவங்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவதை காரியதரிசி ஸ்ரீராம சேஷன் உத்ஸாகத்துடன் தெரிவித்தார். 1974 முதல் ஆங்கில மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை, காலை 8 முதல் 9.30 மணி வரை மாதாந்திர சுப்ரபாத வழிபாடு, நடைபெற்று வருகிறது. மேலும் மாதந்தோறும், ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாளின் திருநக்ஷத்திரமான ச்ரவணதினத்தன்று, மாலை 6 முதல் 8 மணி வரை, ச்ரவண புஷ்பாலங்கார ஊஞ்சல்சேவை நேர்த்தியாகக் கொண்டாடப்படுகிறது. இவற்றின் முடிவில், கூட்டுப் பிரார்த்தனையும் செய்யப்படுகின்றது. 1976 முதல், தொடர்ந்து இந்த சமாஜத்தின் உறுப்பினர்கள், திருமலை பாத யாத்திரை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை, சமாஜ நிர்வாக காரியதரிசி உற்சாகத்துடன் தெரிவிக்கின்றார். சமாஜத்தின் வைபவங்களிலும் தினசரி பூஜைகளிலும், திருமலை யாத்திரையிலும் பங்கேற்கும் பக்தர்களின் வாழ்க்கையில், திருவேங்கடவன் செய்துவருகின்ற அற்புதங்கள் எண்ணிலடங்கா என பக்திமேலீட்டுடன் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். பெருமாளை சேவித்துவிட்டு, மகிழ்ச்சியுடன் திரும்பினோம்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## உண்மையான நட்பு!

தருமனும் அவனது நாயும் ஒரு சாலையில், நடந்து சென்று கொண்டிருந்தனர். அந்த நாய் அவன் வீட்டிலேயே வளர்ந்த ஒன்று. விசுவாசமானது அது. அவனுடனேயே இருக்கும். அவர்கள் சென்ற வழியில், வெயில் அதிகமாக இருந்தது. அவ்விருவரும் ஒரு ஆலமரத்தடியின் நிழலில் ஓய்வெடுத்தனர். மேலும் நடக்கையில் கொஞ்சம் தாகம் எடுத்தது. களைப்பும் அடைந்தனர்.

அப்பொழுது பாதையின் ஓரத்தில், தங்கக் கதவு பொருத்தப்பட்ட ஒரு அழகிய கட்டிடத்தைக் கண்டனர். அது மின்னியது. அதன் இருபுறமும் நீண்டு உயரமாக அழகான பளிங்கு சுவர் எழுப்பப்பட்டு இருந்தது. சுவற்றில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு இருந்தன. அழகான அவ்விடத்தை தருமன் அணுகினான்.

அங்கு ஒரு மேசைப்பலகையின் முன்னால் ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் தருமன் "அய்யா இது என்ன இடம்" என்று கேட்டான். அம்மனிதன் "இதுதான் சொர்க்கம்" என்றான். "அப்படியா! பருக கொஞ்சம் நீர் கிடைக்குமா?" என்றான் தருமன்.

உடனே அம்மனிதன் சம்மதித்து, "அதற்கென்ன! உள்ளே வா. தாகம் தீர குளிர்ந்த நீர் அருந்தி செல்வாய்" என்று சொன்னான். உடனே அந்த பெரிய தங்க கதவுகள் திறக்க ஆரம்பித்தன. தருமன் தனது நாயுடன் உள்ளே நடக்கையில், அம்மனிதன் தடுத்தான். "நண்பரே! உம்மை மட்டும்தான் அனுமதிக்க முடியும். பிராணிகளை நாங்கள் அனுமதிப்பதில்லை" என்றான். அதை கேட்ட தருமனுக்கு என்னவோ போலாயிற்று.

"எனது நாயும் என்னை போலவே கஷ்டப்படும் ஒரு

ஜீவன்தானே? அதற்கும் தாகம் எடுக்கிறதே? அதை விட்டு விட்டு நான் மட்டும் எப்படி சுகப்பட முடியும்? மேலும், அது எனக்காக அல்லவோ வருகிறது? "

இப்படி சிந்தித்த தருமன், மேலும் யோசிக்காமல் தன் நாயுடன் வெளியே நோக்கி நடையை கட்டினான். வெகு தூரம் நடந்தார்கள். தருமன் தன் நாயை அன்புடன் பார்த்தவாறே நடந்தான். அவன் மனம் ஏனோ நிறைந்திருந்தது. ஆனால் உடம்பில் சோர்வு இருந்தது. இப்பொழுது ஒரு மலை முகட்டை அடைந்திருந்தனர். ஒரு மண்பாதை தெரிந்தது. அதன் முடிவில், ஒரு பண்ணை காணப்பட்டது. அதன் கதவுகள் திறந்தே இருந்தன. எங்கு பார்த்தாலும், அப்பண்ணையை சுற்றி மதில் சுவர்களோ அல்லது வேலியோ காணப்படவில்லை. அதன் கதவை தருமன் அணுகினான்.

அங்கு ஒரு மனிதன் ஒரு மரத்தின் மேல் சாய்ந்து கொண்டு, ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தான். தருமன் அம்மனிதனை கூப்பிட்டான் "அய்யா! கொஞ்சம் பருக நீர் கிடைக்குமா?" என்று கேட்டான். "ஓ கிடைக்குமே. உள்ளே செல். அங்கு பார். ஒரு அடி பம்ப் காணப்படுகிறது. அடித்து எடுத்து கொள்" என்றான் அம்மனிதன். தருமன் "அய்யா! எனது நாயும் தாகத்தால் தவிக்கிறது. அதற்கும் தண்ணீர் தேவை" என்றான்.

"அதற்கென்ன அந்த பம்பிற்கு அருகிலேயே ஒரு சின்ன பாத்திரம் தெரிகிறது பார். அதை உபயோகித்து அதற்கும் கொடு" என்று பதில் வந்தவுடன், தருமன் மேலும் தாமதிக்கவில்லை. பம்பை அடித்து, தண்ணீர் எடுத்து தானும் குடித்து அந்த பாத்திரத்தில் நிரப்பி நாய்க்கும் கொடுத்தான். இருவருக்கும் தாகம் தீர்ந்தது.

இப்பொழுது, தருமன் வெளியில் செல்கையில் வாயிலில் இருந்த மனிதனிடம் கேட்டான், "இவ்விடத்திற்கு என்ன பெயர் அய்யா?" அம்மனிதன் சொன்னான், "என்னய்யா என்ன விஷயம். இதுதான் சொர்க்கம்"

தருமன் குழம்பியவாறே "என்னய்யா இது. கொஞ்சம் தொலைவில் உள்ள இடத்தையும் அப்படித்தான் சொல்கிறார்கள்" என்றான். "அட அந்த தங்க கதவு போட்ட இடமா? நல்ல ஆளைய்யா நீ. அதுதான் நரகம்" என்று பதில் வந்தது.


தருமனுக்கு கோபம் வந்துவிட்டது. "நீர் எப்படி அப்படி சொல்லலாம்? அவர்கள் என்ன மடையர்களா? அப்படி பெயர் வைத்து கொள்வதற்கு. இடமோ அழகாக இருக்கிறது" என்று தருமன் கொஞ்சம் தடுமாறி பேசினான்.

அம்மனிதன் சிரித்துக்கொண்டே, "அது உனக்கு புரியாது. தனது நண்பர்களை யார் கைவிடுகிறார்களோ அவர்களை அங்கு தனியே பிரித்து நரகத்தினுள் அனுப்புகிறார்கள்" என்றவுடன் தருமனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

சட்டென தன் உடம்பில் குளிர் காற்று பரவுவதை தருமன் உணர்ந்தான். அவனுக்கு விழிப்பு தட்டியது. அனைத்தும் ஒரு கனவு என உணர்ந்தான். ஆனால், அந்த கனவு தந்த பாடம் அவனை வெகுவாக பாதித்து இருந்தது. நேரே நடந்து சென்று தன் நாயை கட்டி கொண்டான்.

**CHAITANYA MAHAPRABHU NAMA BHIKSHA KENDRA NEW RELEASE**

***"மஹாபெரியவாளும் ஏகாம்பரமாகிய நானும்"***




**Ph : Madhuram Divine Stores at 044-23727400, 09442613710**

## சத்சங்க செய்திகள்

**ஜனவரி 27** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், **விருதுநகரில்** புதியதாக **நாமத்வார்** துவங்கப்பட்டது. காலையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரத திவ்ய தம்பதிகளுக்கு திருமஞ்சனமும் பூஜையும் செய்தார்கள். (இவ்விதழின் முன் அட்டைப்படம்) வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. விருதுநகர் ராமர் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள இந்த நாமத்வாருக்கு, துவக்கத்திலிருந்தே 300க்கும் மேற்பட்ட அன்பர்கள் தினமும் வந்து சத்சங்கத்தில் கலந்து கொண்டு வருகின்றனர்.

**ஜனவரி 27** மாலை **விருதுநகர்** உழவர் சந்தை அருகே லஷ்மி மஹாலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசத்துடன் **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. ஏராளமானோர் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஜனவரி 28, 29, 30** தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி சிவகாசி, தூத்துக்குடி மற்றும் மதுரை நாமத்வார்களுக்கு விஜயம் செய்திருந்தார்கள். 28ஆம் தேதி **தூத்துக்குடி** சுப்பையா வித்யாலயா பள்ளியிலும், **சிவகாசி**யில் 29 மாலை சிவகாசி இண்டஸ்டிரிஸ் சாரிடீஸ் கல்யாண மண்டபத்திலும், 30ஆம் தேதி **மதுரை**யில் வி.எஸ்.செல்லம் மாளிகையிலும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசத்துடன் **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. ஒவ்வோர் இடத்திலும், ஆயிரக்கணக்கான அன்பர்கள் பங்கு கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**பிப்ரவரி 4** சென்னை நாரத கானசபாவில் **ஸ்டார் விஜய் டிவி**யின் **பக்தி திருவிழா**வை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்து, அருளுரை வழங்கினார்கள்.

**பிப்ரவரி 8** ஏழை, எளியோருக்கான மருத்துவ சேவை வழங்கும் பொருட்டு, ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் சார்பில் கோவிந்தபுரத்தில் ஸ்ரீபகவன்னாம போதேந்திராள் ஔஷதாலயத்தின்**(Clinic)** பூமி பூஜை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்று, கட்டிடப்பணிகள் துவங்கின.

**பிப்ரவரி 14** வசந்த பஞ்சமியன்று மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் உள்ள **ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளின் பிரதிஷ்டா தின வைபவம்** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் கொண்டாடப்பட்டது. மிக சிறப்பாக பெருமாளுக்கு திருமஞ்சனம், பூஜை நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களால், அனைவருக்கும் தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள். மாலை ஸ்ரீனிவாச திருக்கல்யாணமும், பெருமாள் புறப்பாடும் மிக சிறப்பாக நடைபெற்றது.

**பிப்ரவரி 17** ஸ்ரீஸ்வாமிஜி நாமக்கல் அருகிலுள்ள **மோகனூருக்கு** விஜயம் செய்தார்கள். முதலில் அங்குள்ள ராகவேந்திர ஸ்வாமிகளின் ப்ருந்தாவனத்தை தரிசனம் செய்து கொண்டு ராகவேந்திர ஸ்வாமிகளை பற்றி சிறிது நேரம் பிரவசனம் செய்தார்கள். அடுத்ததாக, புதியதாக திருப்பணி செய்யப்பட்டு, சம்ப்ரோஷணம் நடைபெற்றுள்ள, ஸ்ரீகல்யாண ப்ரசன்ன வெங்கடரமண ஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்து, தரிசனம் செய்து, பிரவசனமும் செய்தார்கள்.

**பிப்ரவரி 18** மாலை **சிதம்பரம்** புது தெருவில், சிவஸ்ரீ சபாபதி தீக்ஷிதர் நடத்தி வரும் பாடசாலையை ஆரம்பித்து வைத்து, **ஆனந்த நடன சபை** என்று பெயரும் வைத்தார்கள். பிறகு ஆலயம் சென்று ஸ்வாமி தரிசனமும் செய்தார்கள்.

**பிப்ரவரி 21** ஏகாதசி அன்று விஜயகிருஷ்ண பாகவதர் மற்றும் பாலாஜி பாகவதரின் "**ஸ்ரீஞானானந்த விஜயம்**" - ஸ்ரீஞானானந்தகிரி ஸ்வாமிகளின் திவ்ய சரித்திர உபன்யாச சி.டி.யை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட, ஸ்ரீஞானானந்த ஸ்வாமிகளின் பக்தர், ஸ்ரீமுகில் மாமா பெற்று கொண்டார்.

**பிப்ரவரி 23** சென்னை மீனம்பாக்கம் ஏ.எம்.ஜெயின் காலேஜில் நடைபெற்ற **5th Hindu Spiritual & Service Fair 2013**-ல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு, நாம மஹிமை குறித்து உபன்யாசம் செய்தார்கள். (இவ்விதழின் பின் அட்டைப்படம்) முன்னதாக, இதில் பங்கு பெற்ற அனைத்து ஸ்தாபனங்களின் ஸ்டால்களையும் பார்வையிட்டார்கள்.

**ஜனவரி 14** பொங்கல் திருநாளன்று, மதுரபுரி ஆஸ்ரம வளாக ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் தினசரி நடைபெற்ற மார்கழி மாத வீதி பஜனையில், அருகிலுள்ள கிராம சிறார்கள் பலர் சிரத்தையுடன் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட சிறார்களுக்கு பள்ளி சீருடை வழங்கப்பட்டது.

**பிப்ரவரி 2 – 11** வரை ராமானுஜம்ஜி மகாராஷ்டிரா மாநிலத்தில் பல இடங்களில், மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனையும், பாகவத சப்தாஹ சத்சங்கங்களையும் நிகழ்த்தினார். மேலும் பல இடங்களில், தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோர்களுக்கான பயிலரங்கங்களையும் நிகழ்த்தினார். இவற்றில் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**பிப்ரவரி 13 – 19** வரை முரளிஜி ஆம்பூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில், பாகவத உபன்யாசம் செய்தார். இதே சமயத்தில் மழைக்காக அகண்ட நாம கீர்த்தனமும் செய்யப்பட்டது. திரளான அன்பர்கள் கலந்து கொண்டு சிரவணம் செய்தனர்.


rb

**rajmani builders**

launches its new project

**"rajmani's mathura"**

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

ADVT

website: www.rajmanibuilders.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- *ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -3

கோவில் சார்பில் பணம் வசூலிக்க சென்ற ஹம்ஸராஜ்ஜீ ஒரு கோனாரிடம் இருந்து எல்லா பொருட்களையும், அவருடைய பெண்ணின் நகைகளையும் பறிமுதல் செய்தார். அந்த கோனாரின் பெண் அழுதபடியே ஹம்ஸராஜ்ஜீ அருகில் வந்து மிகவும் தீனமாக, "அப்பா! நான் என் தந்தையை பார்ப்பதற்காக பிறந்தகம் வந்தேன். என் புகுந்த வீட்டிற்கு சென்று, நான் எந்த முகத்தை காண்பிப்பேன்" என்று கேட்டாள். இந்த காட்சி ஹம்ஸராஜ்ஜீயை உலுக்கிவிட்டது. பிஹாரிஜீயின் க்ருபையால், அவருக்கு ஒரு ப்ரேரணை உண்டாயிற்று. அவரது மனம், ஸம்ஸாரத்திலிருந்து விலகியது.

அவர் பறிமுதல் செய்த அனைத்து பொருட்களையும், அந்த கோனாரிடமே திருப்பி கொடுத்துவிட்டார். அன்றைய தினமே, அவர் கோவிலுக்கு சென்று, தனது வேலையை ராஜினாமா செய்தார். இரவு 11 மணி ஆகி விட்டது. வீட்டில் அவரது மனைவி கவலையுடன் பிஹாரிஜியை ப்ரார்த்தித்துக் கொண்டிருந்தாள். பகவான் தன் ப்ரார்த்தனையை செவிமடுத்து, ஒரு லீலையைப் புரிந்து, தன் கணவனின் மனதில், மாபெரும் மாற்றத்தை உண்டாக்கியதால்தான், இரவு காலதாமதம் ஆகிவிட்டது என்று அவள் எவ்வாறு அறிவாள்?

வீடு திரும்பியதும், ஹம்ஸராஜ்ஜீ, தன் மனைவியிடம், "நான் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். நாளை நாம் இருவரும் இந்த ஸம்ஸாரத்திற்கும், ராஜினாமா அளித்து, ஸந்யாஸம் எடுத்துக் கொள்வோம்" என்று கூறினார்.

இதை கேட்ட அவரது மனைவிக்கு, ஆனந்தம் கரை புரண்டோடியது. அவள், ஜய் பிஹாரீஜீ கீ என்று கூறியவாறே ஆனந்த கண்ணீர் வடித்தாள்.

மறுநாள், இந்த தம்பதி கோபால்தாஸ் பாபாவிடம் சென்று, தங்கள் அபிலாஷையை தெரிவித்தனர். பாபாவே "நீங்கள் இன்னும் சிறு பிள்ளைகள்தான். நீங்கள் வீட்டில் இருந்தபடியே பஜனை செய்வது உசிதமாகும்" என்றார்.

ஆனால், இருவருக்கும் இந்த ஆலோசனையில் உடன்பாடு இல்லை. மேலும், அவர்களது த்ருடமான நிச்சயத்தை கண்டு பாபா, அவர்களுக்கு, ஸந்யாஸ தீக்ஷை அளித்தார். கணவனது தீக்ஷா நாமம் ஹம்ஸதாஸ், மனைவியுடையது கோபாலீபாயி என்றாயிற்று. ஹமஸ்தாஸரை பர்ஸானாவிலுள்ள விலாஸகட் எனும் இடத்தில், பஜனை செய்யும்படியும், கோபாலீபாயியை கோவர்த்தனத்தில் வசித்துக் கொண்டு, பஜனை செய்யும்படியும் பாபா உபதேசித்தார்.

கோபாலீபாயீ தனது நகைகள் அனைத்தையும் விற்று ஸாது ஸேவை செய்தாள். கோவர்த்தனத்திற்கு தனியாகவே சென்று மதுகரி பிக்ஷையில் கிடைத்ததை உண்டு, பஜனை செய்யலானாள்.

ஹம்ஸதாஸ்ஜியினுடைய தந்தை தனது புத்திரனும் மாட்டுப்பெண்ணும் ஸந்யாஸம் பெற்று கொண்டுவிட்டார்கள் என்பதை அறிந்து, ப்ருந்தாவனம் விரைந்தார். அவரும் ஸ்வபாவமாகவே பக்தி பாவத்துடன் கூடியவராகவே இருந்தார். கோபால்தாஸ் பாபாவை தரிசனம் செய்ததும், அவரால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவரும், கோபால்தாஸ்ஜீ பாபாவிடமே, ஸந்யாஸம் பெற்று பஜனை செய்யலானார். இவர் ஸ்ரீராதிகாதாஸர் ஆனார்.

கோபாலீபாயின் தந்தை லக்நௌ-இல் மெஜிஸ்ட்ரேட் ஆக இருந்தார். தனது பெண், மாப்பிள்ளை, ஸம்பந்தி என்று எல்லோரும் ஸந்யாஸம் பெற்று கொண்டதை அறிந்த அவர், அதற்கு காரணமான பாபாவின் மேல் பெரும் கோபம் கொண்டார். ப்ருந்தாவனத்திற்கு சென்று, பாபாவை கடுமையாக பேசி, அவரை சிறையில் போட்டு விடுவதாகவும் பயமுறுத்தினார். பாபா, இவரது வசவு சொற்களையும், மிரட்டல்களையும் அசைவின்றி கேட்டு கொண்டிருந்தார்.

(தொடரும்)

# மாலே மணிவண்ணா - 116



–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

திருமாலின் ஐம்பெருநிலைகள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பனவாகும். ஐந்தாவது நிலை அர்ச்சை திருமேனி கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளிச் சேவை சாதிப்பது. எல்லாக் காலத்திலும் எல்லோரும் வந்து தன்னை பணிந்து பயன் கொள்ளுமாறு பகவான் திருமேனி கொண்டு பணிவார்க்கு அருளும் இடம்.

அவதார சீலத்தில் ஆழங்காற்பட்டதுபோலவே ஆங்காங்குள்ள திருப்பதிகளில் உள்ள அர்ச்சாவதார மூர்த்திகளில் ஆழ்வார்கள் ஈடுபட்ட வரலாற்றை திவ்யப்ரபந்த பாசுரங்களில் பரக்க காணலாம். அர்ச்சை நிலையில் பகவான் நாம் அணுகுதற்கு எளிமையும் இனிமையும் உடையவனாக இருக்கின்றான். வேண்டுவோர் வேண்டுவதை தருவதற்காக அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளுகிறான். பல்விதமான வடிவங்களில் காட்சி அளிக்கிறான். பல்விதமாக அலங்காரங்களை, அபிடேகங்களை அன்பர்கள் செய்து ஆனந்தப்பட அருள்வதே அர்ச்சாவதார மூர்த்திகளின் சிறப்பு. நாம் விரும்பியவாறெல்லாம் நெருங்கி நின்று வழிபடுவதற்கு எல்லாக்காலத்தும் எல்லார்க்கும் எல்லா நிலையினர்க்கும் அர்ச் சாவதாரம்தான் சுலபமானதாகும் அல்லவா?

இதுவரை உள்ள பாடல்களில் பெருமானது ஆதி வராக அவதாரம், நரசிம்மாவதாரம் என்ற அவதார சிறப்புகள் சொல்ல பெற்றன. வ்யூகத்தில் அவன் நான்காக பிரிந்து வாசுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தராக காண்கிற நிலையை கண்டோம். அங்கங்கே அந்தர்யாமித்வமும் கூறப்பெற்றது. இந்த ஆறாம் பாடல் அர்ச்சை நிலையில் பெருமான் எழுந்தருளியுள்ள சிறப்பை ஒரு திருப்பதியின் மேல் வைத்து காட்டி நம்மை வழிபட அழைக்கிறது. இனி பாடலுள் சென்று காண்போம்.

*புலவரை அறியா புகழொடு பொலிந்து*
*நிலவரை தாங்கிய நிலைமையின் பெயராத்*
*தொலையா நேமி முதல் தொல்லிசை அமையும்*
*புலவர் ஆம்பு உரைத்த புனைநெடுங்குன்றம்*
*பல எனின் ஆங்கு அவை பலவே* 6

உலகில் அங்கங்கே மலைகள் உள்ளன. இம்மலைகள் உலகு அழியாதவாறு சமநிலைப்படுத்தி உலகைத்தாங்கி நிற்கின்றன என்பது ஆன்மீக நூற்கருத்தாகும். மலைகளை அழிக்க அழிக்க உலகம் மெல்ல மெல்ல அழியும் என்பது ஆன்றோர் கூறும் அறிவியல் உண்மையாகும். எட்டுகுல பர்வதங்கள் உலகை தாங்கி நிற்கும் மலைகளாகும். இமாசலம், மந்தரம், சக்கரவாளம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்று இம்மலைகளின் பெயரை சொல்வர். வேறு வகையில் சொல்வதும் உண்டு. சுமேரு, நிஷத, ஹேமகூட, இமாசல, மால்யவத், பாரியாத்ரக, கந்தமாதன, கைலாச, விந்த்யாசலம் என்று மகாசங்கல்பத்தில் சொல்லபெறுகிறது. அறிவெல்லையால் அறியப்படாத புகழோடு கூடியன மலைகள்.

*"அளக்கல் ஆகா அளவும் பொருளும்*
*துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்*
*வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே"* (நன்-28)

என்று நன்னூல் கூறும். அத்தனை கனிமங்களுக்கும் நவரத்தினங்களுக்கும் இருப்பிடம் மலைகளே. எல்லா நதிகளின் இருப்பிடமும் மலைகளே. நதிகள் இல்லையேல் நீர் இல்லை. நீர் இல்லையேல் பயிர்கள் இல்லை. பயிர்கள் இல்லையேல் உயிர்கள் இல்லை. ஆதலின் மலைகள் உலகைத் தாங்குகின்றன எனும் கூற்று தோற்றத்தால் அல்லாமல் கருத்து வகையாலும் பொருந்துகிறது. நிலத்தை தாங்கிய நிலைமையில் சிறிதும் மாறுபடாத சக்கரவாளம் (நேமி) முதலாக புகழ் பொலிந்த புலவர்கள் ஆராய்ந்து சொன்ன எல்லோராலும் பாராட்டப்படுகின்ற மலைகளை பொது வகையால் கூறினால் அவை பலவாகும் - சிறப்பு வகையால் கூறப்பெறும்போது எட்டு மலைகள் உலகை தாங்குவன என்பர். ஆனால் பொது வகையால் எல்லா மலைகளும் உலகை தாங்குவனவே ஆகும். ஆதலின் "பல எனின் அங்கு அவை பலவே" என்றார். (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் – 13

குருவின் மறைவுக்கு பின்னரும், கூடல சங்கமத்தில் சிவாராதனை செய்து கொண்டிருந்த பசவர் கனவில் ஒருநாள் சங்கமேஸ்வரர் தோன்றி, "பசவா! நீ மங்களவேதா போக வேண்டும். அது என் விருப்பம்" என்றார். "உம்மை விட்டு பிரிவதற்கு அல்லவா நீர் சொல்கிறீர்? சந்திரனுக்கு வெப்பம் கிடையாதே; தாய் பிள்ளைக்கு விஷம் கொடுப்பாளா? உன்னை ஆராதிக்க விருப்பப்படும் என்னை போய் ராஜ்யபாரம் சுமக்க சொல்கிறீரே" என்றார் பசவர். சங்கமேஸ்வரர் சிரித்து கொண்டு "நான் எப்படி உன்னை விட்டு பிரிய முடியும்? நான் சொல்வதை கேள்" என்று அனுக்ரஹித்து மறைந்தார். பகவான் சொன்னவுடன் மங்களவேதாவிற்கு பசவர் விரைந்தார்.

பிஜ்ஜாலனின் ராஜ்யத்தில் கருவூலத்தில் ஒரு கணக்கராக சேர்ந்தார். கூர்மையான அறிவும், இயற்கையான நேர்மையும், தெளிவான புத்தியும், அசஞ்சலமான மனதும் இருந்ததால், தான் செய்த உத்யோகத்தில் இருந்த பல குளறுபடிகளை சரி செய்தார். தவறுகளை தட்டி கேட்பதில் பயமற்ற தன்மையும் சோம்பலே இல்லாமல் உழைப்பதையும் கொண்டிருந்ததால், மிக குறுகிய காலத்தில் பசவரை மந்திரிக்கு நிகரான பதவியில் அமர்த்தும்படி வந்தது. தனக்கு முன்னர் பெயரளவில் மன்னனாக இருந்த தைலோபாவை அடக்கி விட்டு, தனது ராஜ்யத்தின் தலைநகரை கல்யாண் நகரத்திற்கு மாற்றினான் பிஜ்ஜாலன். அப்பொழுது பசவருக்கு மந்திரி அந்தஸ்தும் கிடைத்தது.

பசவருக்கு அரசியலில் விருப்பமில்லை. ராஜாங்க வேலை என்பதும் இறைவன் இட்ட கட்டளை என்றே இருந்தார். மாமனார் பலதேவராசரிடம் நிறைய சொத்து இருந்தது. அவற்றில் பசவருக்கு கொஞ்சமும் ஈடுபாடு இல்லை. ஆதலால் அவற்றை எல்லாம் தான தர்மங்கள் செய்ய தலைப்பட்டார் பலதேவராசர். பசவர் வறியவரிடம் அளவற்ற கருணையும் அன்பும்

பொழிபவர்தான். ஆனால், பொருள் தேவையற்று, விரயமாக கூடாது என்றும் விருப்பப்பட்டார். அதனால், உழைப்பை ஆதாரமாக கொண்டே, எல்லோருக்கும் உதவ வேண்டும். எல்லோரும் தங்களால் இயன்ற தொழில் செய்ய வேண்டும். எல்லோரும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டும். இதில் ஏற்றத் தாழ்வுகள் களையப்பட வேண்டும் என்று விரும்பினார்.

இதற்குள்ளாக பசவரின் அகவாழ்வும் மேலும் மேலும் மலர்ந்து கொண்டே இருந்தது. ஏராளமான வசனங்களை தாம் பாடியதோடு மட்டுமல்லாமல், முன்னர் கன்னடத்தில் பக்தர்கள் பாடிய கவிதைகளை எல்லாம் சேகரித்து அவற்றின் பொருளுணர்ந்து அனுபவிப்பார். பசவரின் சகஜமான பழகும் தன்மையும், மறைபொருளில் அவருக்கு இருந்த ஈடுபாடும் அவருக்கு நல்ல பக்தர்களிடமும் பண்பாளர்களிடமும் நட்பை இட்டு தந்தது.

ஒருமுறை பசவரின் வீட்டில், அவர் மனைவியின் நகைகளை ஒரு திருடன் திருட போனான். கங்காம்பிகை சத்தம் போட்டாள். பசவர் விழித்து கொள்ள, திருடனும் பிடிபட்டான். பசவர் திருடனிடம் தயை காட்டி "உனக்கு தேவை இல்லாது இருந்தால் திருடி இருக்க மாட்டாய். செல்வத்தை மறைத்து வைப்பவர்தான் திருடர்கள். இதை கொண்டு சௌக்யமாக இரு" என்று சொல்லி அவன் திருடிய ஆபரணத்தையே கொடுத்தார். அவனுக்கு திருட்டு புத்தியே தொலைந்து போனது. இப்படி பசவரிடம் எந்த வழியில் சம்பந்தம் கொண்டாலும், அவர்களையும் தன் வழிக்கு மெல்ல மெல்ல மாற்றி கொண்டு வந்தார் பசவர்.

பசவர் மந்திரி என்பதால் அவர் எதையும் சுதந்திரமாய் செய்ய முடிந்தது. பசவருக்கு ஆதரவாய் இருப்பதாலேயே தனது ஆதரவும் வளர்கிறது என்பதையும் பிஜ்ஜால மன்னனும் உணர்ந்தான். அதனால் அவருக்கு தன் ஆதரவையும் தந்தான். ஆனால் சாதுக்களுக்கு தொந்திரவு தராத இடம் என்று ஒன்றும் கிடையாது. அவருக்கு சிறு சிறு இடைஞ்சல்களை, பசவரின் புரட்சியை விரும்பாதவர்கள் தந்து கொண்டே இருந்தனர். அதை எல்லாம் பொருட்படுத்தாமல், தினமும் தன்னிடம் வந்து சேர்ந்த சாதுக்களுடன் சேர்ந்து பகவானை அனுபவித்து வரலானார் பசவர். (தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | மார்ச் 8, 23 ஏப்ரல் 6, 22 |
| மார்ச் 6 | கீழ்படப்பை ஸ்ரீவரம்தரும் பெருமாள் கோவில் பூமி பூஜை |
| மார்ச் 8 | 12.30 P.M. மஹாரண்யம் அரசு பள்ளி |
| மார்ச் 3 | கல்யாண வெங்கடேச தேவஸ்தானம், பெங்களூர் |
| மார்ச் 10 | மஹாசிவராத்திரி - கன்யாகுமரி ஜய ஹனுமான் பிரதிஷ்டா தினம் |
| ஏப்ரல் 14 | சித்திரை வருஷ பிறப்பு |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.